**பத்திரிக்கை செய்தி**

## பெப்பர்ஸ் பொழுதுபோக்குத் தொலைக்காட்சியில் புதிய நிகழ்ச்சி:

# ‘சென்னைப் பட்டினம்’

## பிரபலங்களுடன் ஒரு நாள் பயணித்து, அவர்களது அன்றாட வாழ்க்கையையும், சென்னை நகர நினைவுகளையும் ஞாயிறுதோறும் ஒளிபரப்புகிறது !

சென்னை, ஜனவரி 2012

தமிழில் விறுவிறுப்பான மற்றும் வித்தியாசமான அலைவரிசையாக அறிமுகமாகியிருக்கும் **பெப்பர்ஸ் பொழுதுபோக்குத் தொலைக்காட்சி** (Peppers TV)யில், **‘சென்னைப் பட்டினம்’** என்ற புதுமையான நிகழ்ச்சியினை **ஞாயிறுதோறும் காலை 9 மணி முதல் 9.30 மணி வரை** ஒளிபரப்பாகிறது. இதில் பிரபல மனிதர்களோடு ஒரு நாள் முழுவதும் பயணித்து, அவர்களது அன்றாட வாழ்க்கையில் நடக்கும் நிகழ்ச்சிகளும், இடையிடையே அவர்களது சென்னை நகர நினைவுகளும் காட்சிப்படுத்தப்படுகின்றன.

சென்னைக்கும், பிரபலங்களுக்கும் உள்ள தொடர்பு என்ன? அவர்களது கனவுகள் நனவாக இந்நகரம் எவ்வாறு கைகொடுத்தது? என்பன போன்ற கேள்விகளுக்கு, சுவையான பதில்கள் இந்நிகழ்ச்சியில் இடம் பெறும். அவர்களது வாழ்க்கையில் தாக்கத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்திய சென்னை நகரப் பகுதிகள், அவர்களுக்குப் பிடித்த இடங்கள், பொழுதுபோக்கிற்காகச் சென்ற இடங்கள், விரும்பி உண்ணும் உணவகங்கள், எதிர்காலத் திட்டங்கள் என்பன போன்ற – நேயர்களுக்கு ஆர்வம் தரக்கூடிய தகவல்களை இந்நிகழ்ச்சியின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

நடிகர்கள் பிரசாந்த், ‘மைனா’ விதார்த், பெரியார்தாசன், போஸ் வெங்கட், இயக்குநர்கள் வசந்த பாலன், சரவணன், இசையமைப்பாளர் இமான் போன்ற பிரபலங்கள் இந்நிகழ்ச்சியில் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள். இந்நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கும் மறு ஒளிபரப்பு செய்யப்படும்.

இளைஞர்களையும், உள்ளத்தால் இளைஞர்களாக இருப்போரையும் இலக்காக வைத்து பொழுதுபோக்குத் தொலைக்காட்சியாக பெப்பர்ஸ். தம் செயல்பாட்டை அண்மையில் தொடங்கியது. கேளிக்கை, விளையாட்டு, கருத்துப் பகிர்வு, புதுவித திறன்கள், அறிவுசார் தேடல்கள் ஆகியவற்றை சரி விகிதத்தில் கலந்து, ஒரு முழுமையான பொழுதுபோக்கு அலைவரிசையாகத் திகழ்கிறது, பெப்பர்ஸ். ஒவ்வொரு நாளும் மன இறுக்கத்தை மறந்து கொண்டாடி மகிழ, பெப்பர்ஸ் பொழுதுபோக்குத் தொலைக்காட்சி உற்ற நண்பனாக உருவெடுத்துள்ளது.

---

Contact: Peppers TV @ 044 49067777